**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 50 of 2025

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : திருமதி.பிரவீணா

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of April** 2026.

**(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.01.2015 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் ஜபஸ்டின் நெகமம் காவல் நிலையத்தில், நிலைய அலுவலில் இருந்தபோது வெள்ளியங்கிரி மகன் தங்கவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று வழக்கின் தன்மைப்படி நெகமம் காவல் நிலைய குற்ற எண்.4/2015 சட்டப்பிரிவு 294(b), 355, 323, 506(i) இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை

நடுவர், பொள்ளாச்சி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே மாலை 04.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன்குமார் மற்றும் வேலுச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் தங்கவேல், ரவி, முத்துக்குமார், உத்தமசாமி மோகன்குமார், வேலுச்சாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. மேலும் தங்கவேல் அவர்களுக்கு சிகிச்சை அளித்த பல்லடம் அரசு மருத்துவமனை மருத்துவர் ஜமுனா ராணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று கிடைக்கப் பெற்றுள்ளார். காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கின் சட்டபிரிவு 294(b), 355, 323, 506(i) இதச @ 294(b), 323, 324, 506(i) இதச-ன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 294(b), 323, 324, 506(i)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காயம் இவ்வழக்கின் எதிரிகளால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அசா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அசா.1 முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. காவல் உதவி ஆய்வாளர் சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிகள் மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**